# ‘நீட்’ ரத்து: சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தனித் தீர்மானம்!

முதல் பக்கத் தொடர்ச்சி

முதுநிலை மருத்துவப் படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

பல ஆண்டு காலமாக நீட் தேர்வுக்கு எதிராக, தமிழ்நாடும், தமிழ்நாட்டு மக்களும் தனியே போர் தொடுத்து வந்த நிலையில், நீட் தேர்வின் உண்மையான அவல நிலையை உணர்ந்து, பல்வேறு மாநிலங்களிலும் இதற்கு எதிரான எதிர்ப்பு கிளம்பி வருகின்றது. தமிழ்நாட்டின் குரல் இன்று இந்தியாவின் குரலாக நாடு முழுவதும் எதிரொலிப்பதை அண்மை நிகழ்வுகள் காட்டுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

**தலைவர்கள் வலியுறுத்தல்!**

“மருத்துவப் படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையை மாநில அரசுகளே முடிவெடுத்து பழைய நிலையை மீண்டும் கொண்டு வர வேண்டும்” என மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள், பிரதமருக்கே கடிதம் எழுதியுள்ளார். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, உத்தரப் பிரதேச மாநில முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ், பீகார் மாநில எதிர்க்கட்சித் தலைவர் தேஜஸ்வி யாதவ் எனப் பலரும் நீட் தேர்வை இரத்து செய்ய வலியுறுத்திக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

இந்தச் சூழலில் நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு பெற நாம் எடுத்த முயற்சிகளை வெற்றியடைய செய்யவும், தேசிய அளவில் நீட் தேர்வை அறவே அகற்றிடவும் தேவையான முன்னெடுப்பாக, இந்த மாமன்றம் பின்வரும் தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றிய பின், பின்வரும் தீர்மானத்தை வாசித்தார்.

**தீர்மானம்**

“கிராமப்புற, ஏழை எளிய மாணவர்களின் மருத்துவக்கல்வி வாய்ப்புகளை கடுமையாக பாதிக்கும் வகையிலும், பள்ளிக் கல்வியை அவசியமற்றதாக்கும் வகையிலும், மாநில மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களைச் சேர்க்கும் உரிமையை மாநில அரசுகளிடம் இருந்து பறிக்கும் வகையிலும் அமைந்துள்ள நீட் தேர்வு முறை அகற்றப்பட வேண்டும்.

இந்தத் தேர்விலிருந்து தமிழ்நாட்டிற்கு விலக்கு அளித்து, பள்ளிக் கல்வியில் மாணவர்கள் பெறும் 12வது வகுப்பு மதிப்பெண்களின் அடிப்படையில் மருத்துவ மாணவர் சேர்க்கையை மேற்கொள்வ தற்காக, இந்தச் சட்டமன்றப் பேரவை ஒருமனதாக நிறைவேற்றி அனுப்பிய நீட் விலக்கு சட்டமுன்வடிவிற்கு ஒன்றிய அரசு உடனடியாக ஒப்புதல் அளித்திட வேண்டுமென்றும், (மேசையைத் தட்டும் ஒலி) தொடர்ந்து பல முறைகேடுகளுக்கு வழி வகுத்து வரும் இந்தத் தேர்வு முறையை பல்வேறு மாநிலங்களும் தற்போது எதிர்த்து வரும் நிலையில், தேசிய அளவில் நீட் தேர்வு முறை கைவிடப்படும் வகையில் தேசிய மருத்துவ ஆணையச் சட்டத்தில் தேவைப்படும் திருத்தங்களை ஒன்றிய அரசு மேற்கொள்ள வேண்டுமென்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது.”

> நீட் நுழைவுத் தேர்வு அறிமுகப்படுத்தப்பட்ட காலத்திலிருந்தே, அதனை அரசியல்ரீதியாகவும், சட்டரீதியாகவும் தொடர்ந்து எதிர்த்து வருகிறோம். தி.மு.க. சார்பில் மட்டுமல்ல; கழக இளைஞரணி சார்பிலும் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டன. குறிப்பாக, மாணவர் அணியையும், மருத்துவர் அணியையும் ஒருங்கிணைத்து, “நீட் விலக்கு நம் இலக்கு” என்ற மாபெரும் கையெழுத்து இயக்கம் நடத்தப்பட்டது.

இவ்வாறு முதல்வர் அவர்கள், இத்தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து – சட்டமன்றக் கட்சிகளின் சார்பில், கட்சிக்கு ஒருவர் எனும் வகையில், இந்தத் தீர்மானத்தை வழிமொழிந்து உரையாற்றி வரவேற்றார்கள்.

அதனைத் தொடர்ந்து இத்தீர்மானம், பேரவைத் தலைவரால் குரல் வாக்கெடுப்பு மூலம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் மக்கள் பணியால் ஈர்க்கப்பட்டு உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி மற்றும் மாவட்டச் செயலாளர் டாக்டர். பொன்.கௌதமசிகாமணி ஆகியோர் முன்னிலையில் விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் விக்கிரவாண்டி தொகுதி, விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் ஆவுடையார் பட்டு தே.மு.தி.க. வழக்கறிஞர் பிரிவு, வழக்கறிஞர் பாலச்சந்திரன் தலைமையில் பா.ஜ.க. விவசாய அணி பாஸ்கரன் இவர்களுடன் 500க்கும் மேற்பட்டோர் கழகத்தில் இணைந்தனர். மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்டப் பொருளாளர் இரா.ஜனகராஜ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், பேரூர் செயலாளர் நைனா முகமது, பேரூராட்சி மன்றத் தலைவர் அப்துல் சலாம், நகரச் செயலாளர் இரா.சக்கரை, விவசாய அணி பாபு ஜீவானந்தம், இளைஞர் அணி அமைப்பாளர் செ.தினகரன், துணை அமைப்பாளர்கள் எஸ்.பாலாஜி, எஸ்.அன்பு, ப.கலைவாணன், பொருளாளர் என்.என். இளங்கோ, வர்த்தக அணி அமைப்பாளர் கோல்டு வெங்கடேசன், தொழிலாளர் அணி கேபிள் சுரேஷ்பாபு, தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு, ஆவுடையார்பட்டு நிர்வாகிகள் கிளைச் செயலாளர்கள் பிரபு, நாவப்பன், குணசேகர், ஊராட்சி மன்றத் தலைவர் செல்வி உதயகுமார், துணைத்தலைவர் புஷ்பராஜ், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் தேவகி கோபால் உள்ளிட்ட பலர் உடன் உள்ளனர்.



விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிடும் கழகக் கூட்டணி வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு மனித நேய ஜனநாயகக் கட்சியினர் தமீம் அன்சாரி தலைமையில் வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர். அக்கட்சியின் நிர்வாகிகள், ஷஃபி, கலைக்குயில் இப்ராகிம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

### கோவை உக்கடம் லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோவிலுக்கு தங்கத்தேர்!

## இந்துசமய அறநிலையங்கள் துறை அமைச்சர் அறிவிப்பிற்கு நன்றி!

### கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் தெரிவித்தார்!

*கோவை, ஜூன் 30-*

கோவை மாநகர் மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு இந்துசமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு,

கோவை உக்கடம் ஸ்ரீ லட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோவிலுக்கு தங்கத் தேர் செய்யப்படும் என, 26.6.2024 அன்று, தமிழ்நாடு சட்டமன்றத்தில் அறிவித்ததற்கு, கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பிலும், பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் சார்பிலும் நன்றி! நன்றி! நன்றி! என அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### விக்கிரவாண்டி தொகுதி கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு

## விழுப்புரம் வடக்கு மாவட்டக் கழகத்தினர் தீவிர வாக்குச் சேகரிப்பு!

### மாவட்டப் பொறுப்பாளர்கள் டாக்டர் கௌதம சிகாமணி- டாக்டர் சேகர் தலைமையில்!

*விழுப்புரம், ஜூன் 30 -*

விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர். கௌதம சிகாமணி தலைமையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க.வினர் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதிக்கு இடைத் தேர்தல் அடுத்த மாதம் 10ஆம்தேதி நடைபெறுகிறது.

இதில் தி.மு.க. சார்பில் அன்னியூர் சிவா போட்டியிடுகிறார். இவருக்கு ஆதரவாக விக்கிரவாண்டி தெற்கு ஒன்றியத்தில் உள்ள பல்வேறு ஊராட்சிகளில் தி.மு.க.வினர் தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று காலையில் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் கௌதம சிகாமணி தலைமையில் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் முட்டத்தூர் ஊராட்சியில் உள்ளபாகம் எண் 103 ,104, 105 வாக்காளர்களை சந்தித்து உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்குச் சேகரிப்பில் ஈடுபட்டனர். வாக்குச் சேகரிக்க சென்ற வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு அனைத்து இடங்களிலும் ஏராளமான பெண்கள்உற்சாகத்துடன் பங்கேற்று ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

வாக்குச் சேகரிப்பின் போது முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் டாக்டர் மாசிலாமணி, சேதுநாதன், சீத்தாபதி சொக்கலிங்கம், செந்தமிழ்ச் செல்வன், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்டப் பொருளாளர் ரமணன், மரக்காணம் ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், ஒன்றியச் செயலாளர்கள் வேம்பி ரவி, நெடுஞ்செழியன், அண்ணாதுரை, ராஜாராமன், மணிமாறன், செழியன், பழனி, ரவிச்சந்திரன், பச்சையப்பன், விஜயராகவன், திண்டிவனம் நகரச் செயலாளர் கண்ணன், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த்,செஞ்சி நகரச் செயலாளர் கார்த்திக், அனந்தபுரம் நகரச் செயலாளர் சம்பத், விக்கிரவாண்டி தெற்கு ஒன்றிய அவைத் தலைவர் சீனிவாசன், முட்டத்தூர் ஒன்றிய கவுன்சிலர் ஒன்றிய பொருளாளர் கபிலன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கருணாநிதி, நிர்வாகிகள் அன்பழகன், நடராஜ், திருமால், செல்வகுமார், செல்லக்குட்டி, செல்வேந்தன், கோவிந்தசாமி, ரவி, குமரேசன், ஜெயபால், முருகன், ஆறுமுகம், விஜயன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறையூர் க. மகாராசன்
### ஜூன் 30 (2014)



இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

துறையூர் நகரத்தில் மாவட்ட பிரதிநிதியாகவும், அதன் பின்னர் இருபத்தோறு ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

1986–ல் நகர்மன்றத் தலைவராகவும், 2006–ல் நகர்மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### பிலிகுண்டுலுவுக்கு நீர்வரத்து அதிகரிப்பு!

*கிருஷ்ணகிரி, ஜூன் 30-*

காவிரி ஆற்றில் தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு நீர்வரத்து 1,000 கன அடியாக உயர்ந்துள்ளது. பிலிகுண்டுலுவுக்கு விநாடிக்கு 200 கனஅடியில் இருந்து 1,000 கன அடியாக நீர்வரத்து உள்ளது. காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பெய்த கன மழையால் பிலிகுண்டுலுவுக்கு நீர்வரத்து உயர்ந்தது.

### கன்னியாகுமரி சுற்றுவட்டாரப் பகுதிகளில் ரப்பர் பால் வெட்டும் பணி நிறுத்தம்!

*கன்னியாகுமரி, ஜூன் 30-*

கீரிப்பாறை, வாழையத்து வயல் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் ரப்பர் பால் வெட்டும் பணி நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது. மேற்குத் தொடர்ச்சி மலை பகுதிகளில் பெய்து வரும் மழை காரணமாக ரப்பர் பால் வெட்டும் பணி நிறுத்தப்பட்டுள்ளது. 8வது நாளாக ரப்பர் பால் வெட்டும் பணிக்கு செல்லாததால் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டம்பட்டி கா.கந்தசாமி
### ஜூன் 30 (2018)



கழகம் தொடங்கிய நாள் முதல் உறுப்பினராகி, கழகப் பணியாற்றியவர்.

1989–ல் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மூன்று முறை காட்டம்பட்டி ஊராட்சி தலைவராகவும் – கிணத்துகடவு வட்டார நிலவள வங்கி தலைவராகவும் – கோவை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராவும் – மாநில கூட்டுறவு வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**